11

# டால்பின்®

## அமுத சுரபி

# தமிழ்

புதிய பதிப்பு



100
100
உறுதி

**அரசுத்தேர்வு**
**வினாக்களுக்குரிய விடைகள்**
**இணைக்கப்பட்டுள்ளன**

DP® டால்பின் பப்ளிகேசன்ஸ்®

11

# டால்பின்

## அமுத சுரபி

# தமிழ்

புதிய பதிப்பு

**சிறப்பு அம்சங்கள்**

- பாட நூலின் வினா- விடைத்தொகுப்பு
- அரசுத் தேர்வு வினா - விடைத் தொகுப்பு

98653 06197 | 89256 77710 | 99435 67646

டால்பின் பப்ளிகேசன்ஸ்®

தரமே எங்களின் தாரக மந்திரம்

239, கீழப்பட்டித் தெரு, ஸ்ரீவில்லிபுத்தூர் - 626 125, விருதுநகர் மாவட்டம். த.நா.

Mail us : dolphin.pub2005@gmail.com | Visit us : www.kalvidolphin.com

© All Copyrights reserved

விலை : ரூ.171

# பதிப்புரை

அன்பிற்கினிய மாணவச் செல்வங்களே!

வணக்கம். மேல்நிலை முதலாம் ஆண்டில் அடியெடுத்து வைத்துள்ளீர்கள். உங்களை வாழ்த்தி வரவேற்கிறோம்.

மேல்நிலை முதலாண்டு மொழிப்பாடத்தில் உயரிய மதிப்பெண்ணை நீங்கள் பெறவேண்டும் என்ற நோக்கில் இந்த 'டால்பின்' அமுத சுரபி உரைநூல் தயாரிக்கப்பட்டுள்ளது. தமிழகத்தின் மிகச் சிறந்த ஆசிரியர்கள் உள்ளடங்கிய ஆசிரியர் குழுவினர் வினாக்களுக்கான விடைகளை எழுதியுள்ளனர்.

இயல்தோறும் உரைநடை, செய்யுள், துணைப்பாடம், இலக்கணம் எனப் பகுதி வாரியாகப் பாடநூல் வினாக்களுக்கான விடைகள் தெளிவாக, சுருக்கமாகச் சரியான முறையில் தரப்பட்டுள்ளன. தொடர்ந்து 'மொழியை ஆள்வோம்' என்ற பகுதியில் உள்ள மொழிப் பயிற்சிகள் உங்களுடைய மொழியாற்றலை வளர்க்கும் வகையில் கொடுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு இயலிலும் பாடப்பிரிவு வாரியாகக் கூடுதல் வினா – விடைகள் தரப்பட்டுள்ளன. நிறைவாக மாணவர்கள் எளிமையாகப் புரிந்து கொள்ளும் வகையில் மொழிப்பயிற்சிகள், இலக்கணக்குறிப்புகள், பகுபத உறுப்பிலக்கணம், புணர்ச்சி விதிகள் தொகுத்துத் தரப்பட்டுள்ளன.

பாடப்பொருளைப் புரிந்துகொண்டு உள்வாங்கி, அதனைச் சொந்த நடையில், சுயசிந்தனையோடு, பாடம் தொடர்புடைய பிற செய்திகளோடு மாணவர்கள் விடையெழுத வேண்டும் என்பதே கல்வித்துறையின் எதிர்பார்ப்பு. அதனையொட்டியே வினாத்தாள் தயாரிக்கப்படுகிறது. அதனைக் கருத்தில் கொண்டு எமது உரைநூலில் நெடுவினாக்களுக்கான விடைகள் தயாரித்துக் கொடுக்கப்பட்டுள்ளன. அவ்வகையில் உங்களைச் சிந்திக்கத் தூண்டுவதாக இவ்விடைகள் அமையும் என நம்புகிறோம்.

மொழிப்பாடத்தில் கூடுதல் மதிப்பெண்களைப் பெறவும், போட்டித் தேர்வுகளைச் சிறந்த முறையில் கையாண்டு வெற்றி பெறவும் எமது டால்பின் உரை உங்களுக்கு உறுதுணையாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

**முயன்று படித்துச் சிறப்பாக வெற்றிபெற வாழ்த்துகளுடன்...**

அமுத சுரபி தமிழ்,
டால்பின் வெளியீட்டாளர்.

## புத்தகங்களைப் பெறுவதற்கு

**மரியாதைக்குரிய தலைமையாசிரியர்கள் / ஆசிரியைகள் மற்றும் ஆசிரியப் பெருந்தகைகளுக்கு !**

வணக்கம். **டால்பின் பப்ளிகேஷன்ஸ்** நிறுவனத்திற்கு தாங்கள் வழங்கி வருகின்ற பேராதரவிற்கு எங்களின் சிரம்தாழ்ந்த நன்றிகள். நீங்களே எங்களின் வளர்ச்சியின் அடித்தளம். தற்பொழுது தாங்கள் தங்களுக்குத் தேவையான புத்தகங்களை பின்வரும் வழிமுறைகளைப் பின்பற்றி பெற்றுக்கொள்ளலாம்.

**புத்தகங்களைப் பெற**

| | |
|---|---|
| அலைபேசி எண் (Mobile No) | **: 9865306197 / 8925677710 / 9943567646** |
| கட்செவி எண் (Whatsapp No) | **: 9345314146** |
| குறுஞ்செய்தி (Sms) | **: 9345330937** |
| வலைதளம் (Website) | **: www.kalvidolphin.com** |
| மின்னஞ்சல் (E-mail ID) | **: dolphin.pub2005@gmail.com** |

## பணம் செலுத்துவதற்கான விவரங்கள்

**கேட்பு வரைவோலை (D.D.) அல்லது காசோலை (Cheque) :**

டால்பின் பப்ளிகேஷன்ஸ் - ஸ்ரீவில்லிபுத்தூர் **(DOLPHIN PUBLICATIONS, SRIVILLIPUTTUR)** என்ற பெயருக்கு எடுத்து அனுப்பவும்.

## வங்கி கணக்கு விவரங்கள்

Karur Vysya Bank
DOLPHIN PUBLICATIONS
SCAN & PAY WITH ANY UPI APP
wipos.2753796a@kvb
TID: 2753796A

ICICI Bank iMobile
Merchant Name: DOLPHIN PUBLICATIONS
Mobile Number : 8668163362
Steps to Pay UPI QR Code
Open UPI app > Select Tap to Pay > Scan QR Code > Enter Amount

G Pay **63743 17883**


CITY UNION BANK
DOLPHIN PUBLICATIONS
MID: E01020101079104
SCAN & PAY
UPI ID:CFST20003166@CUB

| **KARUR VYSYA BANK** | **CITY UNION BANK** |
|---|---|
| A/C No : 1804135000006000 | A/C No : 328109000204092 |
| IFSC CODE : KVBL0001804 | IFSC CODE : CIUB0000328 |
| BRANCH : Srivilliputtur | BRANCH : Srivilliputtur |

| **ICICI BANK** | **TAMILNADU MERCANTILE BANK** |
|---|---|
| A/C No : 446005500030 | A/C No : 328150310875103 |
| IFSC CODE : ICIC0004460 | IFSC CODE : TMBL0000328 |
| BRANCH : Srivilliputtur | BRANCH : Srivilliputtur |

**பணம் செலுத்திய பின் கீழ்க்கண்ட தொலைபேசி எண்களில் கண்டிப்பாக தகவல் தெரிவிக்கவும்**

**98653 06197, 89256 77710, 99435 67646**


அதிகாரம்:
ஊழ்
திருக்குறள்
0373
திருவள்ளுவர் ஆண்டு தி.பி 2048
நுண்ணிய நூல்பல கற்பினும் மற்றுந்தன்
உண்மை யறிவே மிகும்.
கூரிய அறிவு வழங்கக் கூடிய
நூல்களை ஒருவர் கற்றிருந்த போதிலும்
அவரது இயற்கை அறிவே
மேலோங்கி நிற்கும்.

# பொருளடக்கம்


| இயல் | பொருளடக்கம் | பாடத்தலைப்புகள் | பக்க எண். |
|---|---|---|---|
| | மனப்பாடப் பகுதிகள் | | vii |
| | பாடப்பகுதியும் ஆசிரியர்களும் | | xi |
| 1. | மொழி, கலை | என்னுயிர் என்பேன் | 1 |
| 2. | இயற்கை, வேளாண்மை, சுற்றுச்சூழல் | மாமழை போற்றுதும் | 22 |
| | வாழ்வியல் இலக்கியம் | திருக்குறள் | 44 |
| 3. | பண்பாடு | பீடு பெற நில் | 54 |
| 4. | கல்வி, அழகியல், மனிதம் | கேடில் விழுச்செல்வம் | 73 |
| | வாழ்வியல் இலக்கியம் | திருக்குறள் | 88 |
| 5. | நாகரிகம், தொழில், வணிகம், ஆளுமை | நாளெல்லாம் வினைசெய் | 99 |
| 6. | நாடு, அரசு, சமூகம், நிருவாகம் | வையத் தலைமை கொள் | 121 |

| இயல் | பொருளடக்கம் | | பக்க எண். |
|---|---|---|---|
| | நயம் பாராட்டுக | | **141** |
| | கலைச்சொல் அறிவோம் | | **143** |
| | இலக்கணக்குறிப்பு | | **144** |
| | பகுபத உறுப்பிலக்கணம் | | **146** |
| | புணர்ச்சி விதி | | **149** |
| | பழமொழியை வாழ்க்கை நிகழ்வுகளோடு தொடர்புபடுத்தி எழுதுக. | | **150** |
| | **அணி, திணை, துறை, கூற்று** | பாடப்பகுதியில் இடம்பெற்றுள்ள அணி இலக்கணம் | **163** |
| | | பாடப்பகுதியில் இடம்பெற்றுள்ள திணைகள் | **167** |
| | | பாடப்பகுதியில் இடம்பெற்றுள்ள துறைகள் | **170** |
| | | புணர்ச்சி விதி கண்டறியும் எளிய முறை | **171** |
| | | வினா வங்கி | **175** |

# மனப்பாடப் பகுதிகள்

## இயல் - 1

### 1. யுகத்தின் பாடல்

ஏடு தொடக்கிவைத்து என்னம்மை
மண்ணிலே தீட்டித் தீட்டி எழுதுவித்த
விரல் முனையைத் தீயிலே தோய்த்து
திசைகளின்சுவரெலாம் எழுதத்தான்வேண்டும்
எழுகின்ற யுகத்தினோர் பாடலை.

- சு.வில்வரத்தினம். **(ஜீன்.2023)**

---

## இயல் - 2

### 2. திருக்குறள்

- திருவள்ளுவர்

**அடக்கமுடைமை**

2) யாகாவார் ஆயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு.

3) தீயினால் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
நாவினால் சுட்ட வடு.

---

**ஒப்புரவறிதல்**

4) தாளாற்றித் தந்த பொருளெல்லாம் தக்கார்க்கு
வேளாண்மை செய்தல் பொருட்டு.

---

**புகழ்**

8) தோன்றின் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று. **(ஜீன்.2023)**

---

**நிலையாமை**

13) நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்துஇவ் வுலகு. **(மார்ச்.2024)**

---

**துறவு**

15) யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்
அதனின் அதனின் இலன்.

16) பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு

---

**வலியறிதல்**

19) வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும்
துணைவலியும் தூக்கிச் செயல். **(மார்ச்.2020, மார்ச்.2023, 2025)**

22) அளவறிந்து வாழாதான் வாழ்க்கை உளபோல
இல்லாகித் தோன்றாக் கெடும். **(ஜீன்.2019)**

---

**காலமறிதல்**

24) ஞாலம் கருதினும் கைகூடும் காலம்
கருதி இடத்தால் செயின். **(ஆகஸ்ட்.22)**

---

## இயல் - 3

## குறுந்தொகை

அம்ம வாழி தோழி நம்மூர்ப்
பிரிந்தோர்ப் புணர்ப்போர் இருந்தனர் கொல்லோ
தண்டுடைக் கையர் வெண்டலைச் சிதவலர்
நன்றுநன் றென்னும் மாக்களோடு
இன்றுபெரிது என்னும் ஆங்கண தவையே. (146)

**- வெள்ளி வீதியார் (மார்ச்.23, ஜீலை.24)**

---

## இயல் - 4

## தொலைந்து போனவர்கள்

உடைஅணிந்தேன் எனச் சொல்லுகிறாய் - வெறும்
உடலுக் கணிவது உடையல்ல
விடையைக் கண்டேன் என்றுரைத்தாய் - ஒரு
வினாவாய் நீயே நிற்கின்றாய்.

தின்றேன் என்பாய் அணுஅணுவாய் - உனைத்
தின்னும் பசிகளுக் கிரையாவாய்
வென்றேன் என்பர் மனிதரெல்லாம் - பெறும்
வெற்றியிலே தான் தோற்கின்றார்.

'நான்' என்பாய் அது நீயில்லை - வெறும் **(மார்ச்.20)**
நாடக வசனம் பேசுகிறாய்
ஏன்? என்பாய் இது கேள்வியில்லை - அந்த
ஏன் என்னும் ஒளியில் உனைத் தேடு.

**- அப்துல் ரகுமான்**

---

## இயல் - 4

## திருக்குறள்

**- திருவள்ளுவர்**

<u>**குறிப்பறிதல்**</u>

3) குறிப்பில் குறிப்புணர் வாரை உறுப்பினுள்

யாது கொடுத்தும் கொளல். **(ஜீலை.24)**

---

<u>**பகைத்திறம் தெளிதல்**</u>

7) வில்லேர் உழவர் பகைகொளினும் கொள்ளற்க

சொல்லேர் உழவர் பகை.

8) இளைதாக முள்மரம் கொல்க களையுநர்

கைகொல்லும் காழ்த்த இடத்து. **(மார்ச்.2019, செப். 2021)**

---

<u>மருந்து</u>

9) மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது

அற்றது போற்றி உணின். **(செப். 2020)**

10) நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்

வாய்நாடி வாய்ப்பச் செயல். **(மார்ச்.20, மார்ச்.23)**

<u>இரவச்சம்</u>

13) இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து

கெடுக உலகியற்றி யான். **(மே.2022)**

---

## இயல் - 6

### புரட்சிக்கவி

சிற்றூரும் வரப்பெடுத்த வயலும் ஆறு
தேக்கியநல் வாய்க்காலும் வகைப்ப டுத்தி
நெற்சேர உழுதுழுது பயன்வி ளைக்கும்
நிறைஉழைப்புத் தோள்களெலாம் எவரின் தோள்கள்?
கற்பிளந்து மலைபிளந்து கனிகள் வெட்டிக்
கருவியெலாம் செய்துதந்த கைதான் யார்கை?
பொற்றுகளைக் கடல்முத்தை மணிக்கு லத்தைப்
போய்எடுக்க அடக்கியமூச் செவரின் மூச்சு?

**- பாரதிதாசன்**

**(ஜீன். 2019, செப். 2021, மே.2022, மார்ச்.2024)**

# பாடப்பகுதியும், ஆசிரியர்களும்

## செய்யுள்

| பாடப்பகுதி | ஆசிரியர் |
|---|---|
| யுகத்தின் பாடல் | சு. வில்வரத்தினம் |
| ஒவ்வொரு புல்லையும் | இன்குலாப் (சாகுல் ஹமீது) |
| ஐங்குறுநூறு | பேயனார் |
| மனோன்மணீயம் | பெ. சுந்தரனார் |
| காவடிச்சிந்து | சென்னிகுளம் அண்ணாமலையார் |
| குறுந்தொகை | வெள்ளிவீதியார் |
| பிள்ளைக்கூடம் | இரா.மீனாட்சி |
| தொலைந்து போனவர்கள் | அப்துல் ரகுமான் |
| சீறாப்புராணம் | உமறுப்புலவர் |
| பதிற்றுப்பத்து | குமட்டூர்க் கண்ணனார் |
| புரட்சிக்கவி | பாரதிதாசன் |
| அதிசய மலர் | தமிழ்நதி (கலைவாணி) |
| திருக்குறள் | திருவள்ளுவர் |

## உரைநடை

| பாடப்பகுதி | ஆசிரியர் |
|---|---|
| பேச்சு மொழியும் கவிதை மொழியும் | இந்திரன் |
| மலை இடப்பெயர்கள் : ஓர் ஆய்வு | ஆர் பாலகிருஷ்ணன், இ.ஆ.ப., (ப.நி) |
| காற்றில் கலந்த பேரோசை | சுந்தர ராமசாமி |

## துணைப்பாடம்

| பாடப்பகுதி | ஆசிரியர் |
|---|---|
| யானை டாக்டர் | ஜெயமோகன் |
| வாடிவாசல் | சி.சு.செல்லப்பா |
| ஒரே நண்பன் | ஜெயகாந்தன் |
| செவ்வி | நர்த்தகி நடராஜ் |





எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்
மங்காத தமிழ் என்று சங்கே முழங்கு!
எங்கள் பகைவர் எங்கோ மறைந்தார்
இங்குள்ள தமிழர் ஒன்றாதல் கண்டே!

– பாரதிதாசன்

# இயல் 1 என்னுயிர் என்பேன்

*மொழி, கலை*



## கற்றல் நோக்கங்கள்

- பேச்சுமொழி, கவிதைமொழி ஆகியவற்றின் தனித்தன்மைகளைப் படைப்புகள் பற்றிய கருத்துகளின்வழி புரிந்துகொள்ளுதல்.
- எளிய மக்களின் உணர்வுகளைக் கலைநயத்துடன் வெளிப்படுத்தும் திறனைப் பெறுதல்.
- வாழும் காலத்து ஆளுமைகளின் திறமைகளை உணர்ந்து முன்னோடிகளாகக் கொள்ளுதல்.
- மொழி முதல், இறுதி எழுத்துகள் எவை என்பதை அறிந்து பிறமொழிக் கலப்பின்றிப் பேசவும் எழுதவும் முயலுதல்.

## பாடப்பகுதிகள்

- செய்யுள் – யுகத்தின் பாடல்
- உரைநடை – பேச்சுமொழியும் கவிதைமொழியும்
- செய்யுள் – ஒவ்வொரு புல்லையும்
- துணைப்பாடம் – இசைத்தமிழர் இருவர்
- இலக்கணம் – மொழி முதல், இறுதி எழுத்துகள்

## புத்தகப் பயிற்சி வினாக்கள்

## இலக்கணத் தேர்ச்சி கொள் (பக்கம்.15)

1. **தவறான இணையைத் தேர்வு செய்க.** **(மார்ச்.2020, ஜீன்.2019, மே.2022)**

அ) மொழி + ஆளுமை - உயிர் + உயிர் ஆ) தமிழ் + உணர்வு - மெய் + உயிர்

இ) கடல் + அலை - உயிர் + மெய் ஈ) மண் + வளம் - மெய் + மெய் **[இ) கடல் + அலை - உயிர் + மெய்]**

2. **மொழிக்கு முதலில் வரும் எழுத்துகள் எத்தனை? அவை யாவை?** **(ஜீன்.2023)**

- மொழிக்கு முதலில் வரும் எழுத்துகள் - 22
- அவை : உயிர் எழுத்துகள் - 12 (அ முதல் ஒள வரை)
- மெய் எழுத்துகள் - 10 (க, ங, ச, ஞ, த, ந, ப, ம, ய, வ)

3. **மொழிக்கு இறுதியில் வரும் எழுத்துகள் எத்தனை? எடுத்துக்காட்டுத் தருக.** **(மார்ச்.2024)**

- மொழிக்கு இறுதியில் வரும் எழுத்துகள் : 24
- உயிர் எழுத்துகள் - 12 (அ முதல் ஒள வரை)
- மெய் எழுத்துகள் - 11 (ஞ், ண், ந், ம், ன், ய், ர், ல், வ், ழ், ள்)
- குற்றியலுகரம் - 1 இவையே மொழிக்கு இறுதியில் வரும் எழுத்துகளாகும்.

**எ.கா.** நாடு - உயிரீறு
தமிழ் - மெய்யீறு
வீடு - குற்றியலுகர ஈறு

4. **உயிரீறு, மெய்யீறு - விளக்குக. (அ) உயிரீறு, மெய்யீறு பற்றி எடுத்துக்காட்டுடன் எழுதவும்.** **(மார்ச்.2020, 2023)**

- நிலை மொழியின் இறுதி எழுத்து உயிர் எழுத்தாக நிற்பின் அதை உயிரீறு என்பர்.
- எ.கா.- மணிமாலை - மணி + மாலை - (மணி - நிலைமொழி) (ணி- இறுதி எழுத்து - ண் + இ)
- நிலை மொழியின் இறுதி எழுத்து மெய் எழுத்தாக நிற்பின் அதை மெய்யீறு என்பர்.
- எ.கா.- பொன்வண்டு - பொன் + வண்டு - (பொன் - நிலை மொழி) (ன் இறுதி எழுத்து)

5. **உயிர் முதல், மெய்ம்முதல் - எடுத்துக்காட்டுடன் விவரிக்க.** **(மே.2022)**

- வருமொழியின் முதல் எழுத்து உயிர் எழுத்தாக இருப்பின் அது உயிர் முதல் எனப்படும்.
- எ.கா.- வாழையிலை - வாழை + இலை - (இலை - வருமொழி) (இ - முதல் எழுத்து)
- வருமொழியின் முதல் எழுத்து மெய் எழுத்தாக இருப்பின் அது மெய் முதல் எனப்படும்.
- எ.கா. - தமிழ்நிலம் - தமிழ் + நிலம் - (நிலம் - வருமொழி) (நி (ந்+இ) முதல் எழுத்து)

## அரசுப் பொதுத் தேர்வு வினா - விடைகள்

1. **மொழிக்கு முதலில் வரும் எழுத்துகள்:** **(மார்ச்.2024)**

அ) 22 ஆ) 48 இ) 18 ஈ) 24 **[அ) 22]**

2. **தவறான இணையைத் தேர்வு செய்க.** **(மார்ச்.2025)**

அ) மல்லி + இலை - உயிர் + மெய் ஆ) கலை + அழகு - உயிர் + உயிர்

இ) பல் + பொடி - மெய் + மெய் ஈ) மெய் + அறிவு - மெய் + உயிர்

**[அ) மல்லி + இலை - உயிர் + மெய்]**

# நம்மை அளப்போம் (பக்கம்.16)

## பலவுள் தெரிக

1. **பொருத்தமானதைத் தேர்ந்தெடுக்க.**

அ) மல்லார்மே - யுகத்தின் பாடல் ஆ) இன்குலாப் - ஒவ்வொரு புல்லையும்

இ) ஸ்டெஃபான் மல்லார்மே - புல்லின் இதழ்கள்

ஈ) இந்திரன் - பேச்சுமொழியும் கவிதை மொழியும்

i) அ, ஆ ii) அ, ஈ iii) ஆ, ஈ iv) அ, இ **[iii) ஆ, ஈ]**

2. **‘‘கபாடபுரங்களைக் காவுகொண்டபின்னும்**
**காலத்தால் சாகாததொல் கனிமங்கள்’’ - அடி மோனையைத் தெரிவு செய்க.**

அ) கபாடபுரங்களை - காவு கொண்ட ஆ) காலத்தால் - கனிமங்கள்

இ) கபாடபுரங்களை - காலத்தால் ஈ) காலத்தால் - சாகாத **[இ) கபாடபுரங்களை - காலத்தால்]**

3. **‘‘மொழிதான் ஒரு கவிஞரை நிகழ்காலத்தவரா அல்லது இறந்த காலத்தவரா என்பதை நிர்ணயிக்கிறது’’ எனக் கூறியவர் __________.**

அ) வால்ட் விட்மன் ஆ) எர்னஸ்ட் காசிரர் இ) ஆற்றூர் ரவிவர்மா ஈ) பாப்லோ நெரூடா

**[இ) ஆற்றூர் ரவிவர்மா]**

4. **‘‘திரவ நிலையில், நான் விரும்பும் வகையில் என்னிடம் கீழ்ப்படிந்து நடந்து கொள்ளும் எனது மொழி, எழுத்து மொழியாகப் பதிவு செய்யப்படுகிறபோது உறைந்து போன பனிக்கட்டியைப் போன்ற திட நிலையை அடைந்து விடுகிறது’’. இவ்வரிகள் உணர்த்தும் கருத்து.**

அ) மொழி என்பது திட, திரவ நிலையில் இருக்கும்

ஆ) பேச்சுமொழி, எழுத்துமொழியை திட, திரவப் பொருளாக உருவகப்படுத்தவில்லை.

இ) எழுத்து மொழியைவிட பேச்சுமொழி எளிமையானது.

ஈ) பேச்சுமொழியைக் காட்டிலும் எழுத்து மொழி எளிமையானது.

**[இ) எழுத்து மொழியைவிட பேச்சுமொழி எளிமையானது]**

5. மொழி முதல் எழுத்துகளின் அடிப்படையில் முறையானதைக் கண்டுபிடிக்க.

அ) அன்னம், கிண்ணம் ஆ) டமாரம், இங்ஙனம்

இ) ரூபாய், லட்சாதிபதி ஈ) றெக்கை, அங்ஙனம் **[அ) அன்னம், கிண்ணம்]**

## அரசுப் பொதுத் தேர்வு வினா - விடைகள்

1. **'தன் இனத்தையும் மொழியையும் பாடாத கவிதை வேரில்லாத மரம் கூடில்லாத பறவை' என்று பாடியவர் ______________.** **(செப்.2021)**

அ) பாரதிதாசன் ஆ) பாரதியார்

இ) இரசூல் கம்சதோவ் ஈ) சு. வில்வரத்தினம் **[இ) இரசூல் கம்சதோவ்]**

2. **மனித இனத்தின் ஆதி அடையாளம்:** **(ஜீன்.2023)**

அ) எழுத்து ஆ) பேச்சு இ) மொழி ஈ) பாட்டு **[இ) மொழி]**

3. **கவிதையினை இயன்றவரை பேசுவதுபோல் எழுதுவதுதான் உத்தமம் என்றும் அதுவே மானுடத்துக்கு எழுத்தாளர்கள் செய்யும் கடமை என்றும் கூறியவர்:** **(மார்ச்.2020)**

அ) மகாகவி பாரதியார் ஆ) இராசேந்திரன் இ) எர்னஸ்ட் காசிரர் ஈ) வால்ட் விட்மன்

[மகாகவி பாரதியார்]

4. **'புல்லின் இதழ்கள்' என்ற உலகப்புகழ் பெற்ற நூல் யாருடைய படைப்பாகும்?** **(ஜீன்.2019)**

அ) பாப்லோ நெரூடா ஆ) மல்லார்மே இ) வால்ட்விட்மன் ஈ) எர்னஸ்ட் காசிரர்

[இ) வால்ட் விட்மன்]

5. **பேச்சு என்பது மொழியில் ______________.** **(செப்.2021, மே.2022)**

அ) பறப்பது ஆ) நீந்துவது இ) ஓடுவது ஈ) மூழ்குவது [**ஆ) நீந்துவது**]

6. **1971 ஆம் ஆண்டு இலக்கியத்திற்கான நோபல் பரிசு பெற்ற இலத்தீன் அமெரிக்காவின் மிகச் சிறந்த கவிஞர் :**

அ) வால்ட் விட்மன் ஆ) ஆற்றூர் ரவிவர்மா **(ஆகஸ்ட்.2022)**

இ) ஸ்டெஃபான் மல்லார்மே ஈ) பாப்லோ நெரூடா **[ஈ) பாப்லோ நெரூடா]**

7 **வெண்சுவை - இலக்கணக்குறிப்புத் தருக.** **(மார்ச்.2025)**

அ) உவமைத்தொகை ஆ) வினைத்தொகை இ) உம்மைத்தொகை ஈ) பண்புத்தொகை

**[ஈ) பண்புத்தொகை]**

8. **இன்குலாபின் கவிதைகள் என்னும் பெயரில் முழுமையாகத் தொகுக்கப்பட்டுள்ளன.** **(செப்.2020)**

அ) உயிர்த்தெழும் காலத்துக்காக ஆ) கனவுகள் + கற்பனைகள் = காகிதங்கள்

இ) ஒவ்வொரு புல்லையும் பெயர் சொல்லி அழைப்பேன்

ஈ) கூவும் குயிலும் கரையும் காகமும் **[இ) ஒவ்வொரு புல்லையும் பெயர் சொல்லி அழைப்பேன்]**

9. **ஆஸ்கர் விருது யாருக்கு வழங்கப்பட்டது?** **(மே.2022)**

அ) ஏ.ஆர். இரகுமான் ஆ) பாரதிராஜா

இ) சித்ரா ஈ) இளையராஜா **[அ) ஏ.ஆர். இரகுமான்]**

10. **ஆசியாவிலேயே முதன்முதலில் 'சிம்பொனி' என்னும் மேற்கத்திய செவ்வியல் வடிவ இசைக் கோவையை உருவாக்கியவர் ...............................** **(ஆகஸ்ட்.2022)**

அ) எம்.எஸ்.விஸ்வநாதன் ஆ) சங்கர் கணேஷ் இ) ஏ.ஆர்.இரகுமான் ஈ) இளையராஜா

**[ஈ) இளையராஜா]**

11. **'பால் நிலாப்பாதை' என்ற நூலை எழுதியவர்:** **(மார்ச்.2023)**

அ) ஏ.ஆர்.ரகுமான் ஆ) இளையராஜா இ) கங்கை அமரன் ஈ) பாரதிராஜா **[ஆ) இளையராஜா]**

## குறுவினா

1. **பேச்சுமொழி, எழுத்து மொழியைக் காட்டிலும் உணர்ச்சி வெளிப்பாட்டுச் சக்தி மிக்கது ஏன்?** **(மார்ச்.2024)**

- எழுத்துமொழியில் எழுதுவதை மட்டும் தான் மனிதனின் கை செய்கிறது.
- ஆனால் பேச்சுமொழியில் முகத்திலிருக்கும் வாய், உடம்பிலிருக்கும் கையைக் காட்டிலும் உணர்ச்சி வெளிப்பாட்டைத் தெரிவிப்பதாக அமைந்துள்ளது.
- அதனால்தான், பேச்சுமொழி எழுத்துமொழியைக் காட்டிலும் அதிக உணர்ச்சி வெளிப்பாட்டுச் சக்தி மிக்கதாக உள்ளது.

2. **என் அம்மை, ஒற்றியெடுத்த**
**நெற்றி மண் அழகே!**
**வழி வழி நினதடி தொழுதவர்,**
**உழுதவர், விதைத்தவர்,**
**வியர்த்தவர்க்கெல்லாம்**
**நிறைமணி தந்தவளே!**

**- இக்கவிதை அடிகளில் உள்ள வினையாலணையும் பெயர்களை எழுதுக.**

- தொழுதவர்,
- உழுதவர்,
- விதைத்தவர்,
- வியர்த்தவர், தந்தவள்

3. **''நீளும் கைகளில் தோழமை தொடரும் நீளாத கைகளில் நெஞ்சம் படரும்'' - தொடை நயங்களை எடுத்தெழுதுக.**

**மோனை** : நீளும் - நீளாத, தொடரும் - தோழமை
**எதுகை** : நீளும் - நீளாத, தொடரும் - படரும்
**இயைபு** : தொடரும் - படரும்
**முரண்** : நீளும் - நீளாத

4. **உயிரெழுத்து, பன்னிரண்டு, திருக்குறள், நாலடியார் - இச்சொற்களில் எவ்வகை ஈற்றெழுத்துகள் அமைந்துள்ளன? (ஆகஸ்ட்.2022)**

- உயிரெழுத்து (த் + உ) = உயிரீறு
- பன்னிரண்டு (ட் + உ) = உயிரீறு
- திருக்குறள் (ள்) = மெய்யீறு
- நாலடியார் (ர்) = மெய்யீறு

5. **இனம், மொழி குறித்த இரசூல் கம்சதோவ் பார்வையைக் குறிப்பிடுக. (ஆகஸ்ட்.22, மார்ச்.23, ஜீன்.23)**

- தன் இனத்தையும் மொழியையும் பாடாத கவிதை, வேரில்லாத மரம்; கூடில்லாத பறவை - **இரசூல் கம்சதோவ்**

## அரசுப் பொதுத் தேர்வு வினா - விடைகள்

1. **கவிதை என்பது யாது? என்ற வினாவிற்கு இந்திரன் அளிக்கும் விடை யாது? (செப்.2021)**

- கவிதை என்பது ஒரு பொருளன்று.
- அது மொழிக்குள் உலகையும், உலகிற்குள் மொழியையும் முழுவதுமாக நுழைத்து விடுவதற்காக முயலும் தொடர்ந்த ஒரு படைப்புச் செயல்பாடு ஆகும்.

## சிறுவினா

1. **சு.வில்வரத்தினம் பாடத்தான் வேண்டும் என எவற்றைக் குறிப்பிடுகிறார்? (மார்ச்.23, 25)**

- நாட்டையும், மொழியையும் வாழ்த்தி, தாய்மொழிக்குத் தொண்டாற்றிய சான்றோர் பெருமக்களைப் போற்றிப் பாட வேண்டும்.
- நமது தாய்மொழியாம் தமிழ்மொழியின் தொன்மம், காலத்தால் அழியாத வகையில் வலிமை சேர்க்கப்பாட வேண்டும் என்று கவிஞர் சு.வில்வரத்தினம் குறிப்பிடுகின்றார்.

2. **கவிதை ஒரு படைப்புச் செயல்பாடு என்பதை விளக்குக.**

- கவிதை என்பது ஒரு பொருளன்று; அது மொழிக்குள் உலகையும் உலகிற்குள் மொழியையும் முழுவதுமாக நுழைத்து விடுவதற்காக முயலும் தொடர்ந்த ஒரு படைப்புச் செயல்பாடு ஆகும்.
- கவிதை என்பதே மொழிதான். கவிதை எழுதும் போது எத்தகைய மொழியைப் பயன்படுத்துகிறோமோ அதன் குணாம்சங்களையும் பேச்சு வழக்குகளையும் கவனத்தில் கொள்ள வேண்டியது கவிஞனின் கடமை.

3. **இன்குலாப், ''உலகுக்கு வேண்டும் நானும் ஓர் துளியாய்'' எனக் கூறுவதன் நயத்தை விளக்குக. (மார்ச்.25)**

- ஒவ்வொரு புல்லையும் பெயர் சொல்லி அழைப்பேன்,
- பறவைகளோடு எல்லையைக் கடப்பேன், பெயர் தெரியாத கல்லையும் மண்ணையும் தெரிந்த சொல்லால் அழைப்பேன் என்று இயற்கையோடு உறவு கொள்ள விரும்புகிறார் இன்குலாப்.

- உதவும் கரங்களுக்கு நான் தோழனாகவும், உதவமுடியாத மனிதர்களுக்கு நான் நேசனாகவும் இருப்பேன் என்கிறார்.
- உலகத்தைக் கடலாக்க வேண்டும் என்றும், அதில் ஒரு துளி நீராகத் தான் மாற வேண்டும் என்றும் விழைகிறார்.
- இவ்வாறு உலகத்தில் உள்ள அனைத்திலும் தான் இரண்டறக் கலந்துவிட இன்குலாப் விழைகிறார் என்பதனை இப்பாடல் வழியாக நாம் அறிந்து கொள்ள முடிகிறது.

---

**4. 'என்னுயிர் தமிழ்மொழி என்பேன்' என்னும் தலைப்பில் நீவிர் கொண்டுள்ள மொழிப்பற்றினை எழுதுக.**

- மொழி மனித இனத்தின் ஆதி அடையாளம். **(ஜீலை.24)**
- அது பண்பாட்டுப் பரிணாம வளர்ச்சியை அடிப்படையாகக் கொண்டு உருவானது.
- ஓர் இனத்தின் மையப்புள்ளியாக விளங்குவதும் மொழியே
- அது நம் இருப்பின் அடையாளம்.
- நம் தாய்மொழியாம் தமிழ்மொழியின் வேர், சங்கத்தில் தொடங்கி இன்றைய காலம் வரையும், இடர்பல களைந்து உயர்தனிச் செம்மொழியாகச் செழித்தோங்கி இருக்கிறது.
- எனவே 'என்னுயிர் தமிழ்மொழி என்பேன்'.

---

**5. மொழி முதல், இறுதி எழுத்துகள் யாவை? ஒவ்வொன்றிற்கும் எடுத்துக்காட்டுத் தருக.**

✓ **மொழி முதல் எழுத்துகள் :** 22

- **உயிரெழுத்துகள் -** 12

அ - அம்மா, ஆ - ஆற்றல், இ - இதயம், ஈ - ஈழம், உ - உயிர், ஊ - ஊக்கம், எ - எளிது, ஏ - ஏற்றம், ஐ - ஐப்பசி, ஒ - ஒற்றுமை, ஓ - ஓலை, ஔ - ஔவை.

- **மெய்யெழுத்துகள் -** 10

க - கடல், ங - ஙனம், ச - சங்கம், ஞ - ஞாலம், த - தமிழ், ந - நன்றி, ப - பகல், ம - மரம், ய - யாழ், வ - வாள்

✓ **மொழி இறுதி எழுத்துகள் :** 24

- **உயிரெழுத்துகள் -** 12

சில - அ, அப்பா - ஆ, கல்வி - இ, தீ - ஈ, உலகு - உ, பூ - ஊ, அலை - ஐ, நொ - ஒ, போ - ஓ, கௌ - ஔ.

- **மெய்யெழுத்துகள் -** 11

நாண் - ண், மரம் - ம், மான் - ன், தாய் - ய், பார் - ர் , கடல் - ல், யாழ் - ழ் நாள் - ள்.

- **குறிப்பு : ஞ், ந், வ் - பழைய இலக்கிய வழக்கில் சொல்லின் இறுதியில் வந்துள்ளன.** உரிஞ், வெரிந், தெவ்

**குற்றியலுகரம் -** 1

அச்சு - (சு = ச் + உ) வன்தொடர்க் குற்றியலுகரம்

## அரசுப் பொதுத் தேர்வு வினா - விடைகள்

1. **''நேரடி மொழி'' என்பதை நும்பாட வழி நின்று எழுதுக.** **(மே.2022)**

எழுத்துமொழியைக் காட்டிலும் பேச்சுமொழி உணர்ச்சிக்கு மிக அருகில் இருக்கிறது. எனவேதான் இலக்கிய வழக்கைக் கைவிட்டுப் பேச்சுமொழிக்குத் திரும்பியவுடனே கவிஞனுடைய கவிதையின் மொழி, அதிக வெளிப்பாட்டுச் சக்தி கொண்டதாக மாறிவிடுகிறது. எழுத்துமொழி அப்படியன்று. எழுதுவதை மட்டும்தான் மனிதனின் கை செய்கிறது. முகத்திலிருக்கும் வாய், உடம்பிலிருக்கும் கையைக் காட்டிலும் மிகுதியாக உணர்ச்சி வெளிப்பாட்டைத் தெரிவிப்பதாக அமைந்துள்ளது. அதனால்தான், பேச்சுமொழி எழுத்துமொழியைக் காட்டிலும் அதிக உணர்ச்சி வெளிப்பாட்டுச் சக்தி மிக்கதாக உள்ளது.

நேரடிமொழி எனப்படும் பேச்சுமொழிக்கு ஒருபோதும் பழமை தட்டுவதில்லை. அது வேற்றுமொழி ஆவதில்லை. அது எப்போதும் உயிர்ப்புடனும் மாறிக்கொண்டும் இருக்கிறது. இம்மொழிதான் ஒரு கவிஞரை நிகழ்காலத்தவரா அல்லது இறந்தகாலத்தவரா என்பதை நிர்ணயிக்கிறது என்கிறார் மலையாளக் கவி ஆற்றூர் ரவிவர்மா.

---

2. **கவிஞர் மல்லார்மே பேச்சு மொழியைக் கவிதையில் பயன்படுத்தும் முறை பற்றி விளக்கம் தருக.** **(ஆகஸ்ட்.2022)**

- கவிஞர் மல்லார்மே போன்றவர்கள் இரண்டாம் வகையினர்.
- இரண்டாம் வகையினரின் கவிதைகள், எதிராளியை விளித்துப் பேசுவது போன்றது அன்று.
- மின்சார ரயிலின் நெருக்கத்தில் படியில் தொங்கிக் கொண்டு போகிற போது வெளியில் பரந்து கிடக்கும் தனிமையைச் சாட்சியாக வைத்துத் தங்களுக்குத் தாங்களே உதடு பிரித்துப் பேசிக் கொள்ளும் வகை.
- தனிப்பட்ட ஒவ்வொரு சொல்லும் பிறிதொன்றைப் பேசுவதோடு மட்டுமல்லாமல் தன்னையே பேசிக் கொள்கிறது.
- குறியீடுகளின் கூட்டம் ஒரு முனையிலும் மொழி மறுமுனையிலும் இருக்கையில் கவிதையின் பேச்சு, இடையில் இருக்கும் வெளியில் புழங்குகின்றது.
- குறியீட்டுக் கவிதை என்பது பொருளைப் பதிவு செய்வதன்று; நினைவு கூரத்தக்க தருணங்களைப் பதிவு செய்வதாகும்.

---

## நெடுவினா

1. **நீங்கள் மொழியை வெளிப்படுத்தும் நிலையில் பேச்சு மொழியையும் எழுத்து மொழியையும் எவ்வாறு உணர்கிறீர்கள் என்பதை விவரிக்க.** **(மார்ச்.2020, 2024, ஜீன்.2019, மே.2022)**

மொழிதான் ஒருவருடைய உலகத்தை, ஒவ்வொரு பொருளுக்கும் பெயர்களுடன் கட்டியெழுப்புகிறது. மொழி ஒருவருக்கு அறிமுகமாவதற்கு முன்னால், பொருள்களும், விலங்குகளும், பறவைகளும், வானும், நிலவும், சூரியனும், மரங்களும், செடிகளும் அவருக்கு அறிமுகமானதாக இருந்திருக்க இயலாது. எனவே அத்தகைய மொழியைப் பேச்சுமொழி, எழுத்துமொழி என இரண்டு வகையில் வெளிப்படுத்தலாம். அப்படி வெளிப்படுத்தும்போது மொழியை நான் எவ்வாறு உணர்கிறேன் என்பதை இக்கட்டுரை விவரிக்கிறது.

**மொழி வெளிப்பாடு:**

உடம்பின் ஒரு பகுதியாக இருக்கிற தொண்டையிலிருந்து சொற்கள் எழுகின்றன. அவற்றை ஏற்றம், இறக்கம், உச்சரிப்பு, வேகம், நிதானம், திருப்பித் திருப்பிச் சொல்லுதல், இடையில் கொடுக்கும் மௌனம் ஆகியவற்றை ஏற்றவாறு பயன்படுத்திப் பொருள் வேறுபாடுகளை என்னால் ஏற்படுத்த முடியும் என உணர்கிறேன். இதுமட்டுமின்றி, கைகால் அசைவுகள், முகத்தின் தசைநார்ச் சுருக்கங்களின் அபிநயங்கள் ஆகிய உடம்பின் செயல்பாடுகள் என்னுடைய **மொழி வெளிப்பாட்டின்** பகுதியாக உள்ளன.

**உறை பனிக்கட்டி:**

ஒரு திரவ நிலையில், நான் விரும்பும் வகையில் என்னிடம் கீழ்ப்படிந்து நடந்து கொள்ளும் எனது மொழி, எழுத்து மொழியாகப் பதிவு செய்யப்படுகின்றபொழுது உறைந்துபோன பனிக்கட்டியைப் போன்ற திடநிலையை அடைந்துவிடுகிறது.

**உணர்ச்சிக்கு அருகாமை:**

எழுத்து மொழியைக் காட்டிலும் பேச்சுமொழி உணர்ச்சிக்கு மிக அருகில் இருக்கிறது. எழுதுவதை மட்டும்தான் நம் கை செய்கிறது. ஆனால் முகத்திலிருக்கும் வாய், உடம்பிலிருக்கும் கையைக் காட்டிலும் உணர்ச்சி வெளிபாட்டைத் தெரிவிப்பதாக அமைந்துள்ளது. அதனால் பேச்சு மொழி எழுத்துமொழியைக் காட்டிலும் அதிக உணர்ச்சி வெளிப்பாட்டுச் சக்தி மிக்கதாக உள்ளதை நான் உணர்கிறேன்.

**நேரடி மொழி:**

எழுத்து மொழியில் பேச்சைக்கேட்க எதிராளி என்கிற ஒருவன் கிடையாது. எழுத்து என்பது ஒருவகையில் தனக்குத்தானே பேசிக்கொள்கிற பேச்சு. ஆனால் பேச்சு என்பது தன்னைத் திறந்து கொள்கிற ஒரு செயல்பாடு; பேச்சு என்பது மொழியில் நீந்துவது. பேசும்போது நமது உடம்பின் வெளிப்பாடுகள் நம்மை மொழியென்னும் நீரில் முன்னோக்கி நகரச் செய்கின்றன. எனவே பேச்சுமொழியே நேரடி மொழி என நான் உணர்கிறேன்.

**(அல்லது)**

- பேச்சுமொழி என்பது திரவ நிலையிலிருந்து நம் விருப்பத்திற்கு ஏற்றவாறு, கையாளவும், உணர்வுகளை வெளிப்படுத்தவும், பிறரை உயரச் செய்யவும் துணைபுரிகிறது.
- எழுத்தாகப் பதிவு செய்யப்படும் மொழி உறைந்து போன பனிக்கட்டி போன்று திட நிலை பெற்று விடுகிறது. ஆகவே கையாள எளிதாக இருப்பது இல்லை.

**பேச்சுமொழியின் சிறப்பு:**

- எழுத்தை மனிதனின் கை எழுதினாலும் அந்த எழுத்தின் உணர்ச்சியை முகத்தில் உள்ள வாயினால் மட்டுமே வெளிப்படுத்த முடியும்.
- அதனால் எழுத்து மொழியை விடவும் பேச்சு மொழிக்கே ஆற்றல் அதிகம் உள்ளது.
- எழுத்துமொழியில், அதனைக் கேட்க எதிராளி ஒருவரும் இருப்பதில்லை.
- பேச்சுமொழி அப்படி அன்று.
- எழுத்துமொழியை விடவும் பேச்சு மொழிக்கு உணர்ச்சியை வெளிப்படுத்தும் ஆற்றல் மிகுதி.

**எழுத்து மொழியின் இயல்பு:**

- எழுத்துமொழி என்பது ஒரு வகையில் தனக்குத்தானே பேசிக்கொள்கிற பேச்சு.
- உறைந்த பனிக்கட்டி போன்ற திட நிலை கொண்டது.
- எழுத்துமொழி விருப்பம் போல் கையாள முடியாத இயல்புடையது.
- எழுத்துமொழி நேரடி பயன்பாட்டிற்கு உதவாததால் வேற்றுமொழி போல் ஆகிவிடுகிறது.

**பேச்சுமொழியில் கவிதை:**

- பேச்சுமொழியே ஒரு கவிஞனை நிகழ்காலத்தவனா? இறந்தகாலத்தவனா? என நிர்ணயம் செய்யும் ஆற்றல் உடையது.
- பேச்சுமொழியில் ஒரு கவிதையைப் படைக்கின்ற போது அது உடம்பின் மேல் தோல் போல் இயங்குகிறது.
- ஆனால் எழுத்துமொழியில் அதே சொற்கள் அழகுடையதானாலும், உணர்ச்சி இல்லாத ஆடைபோல் போர்த்திக் கொள்ள உதவுகிறது.
- பேச்சுமொழியை உடனே தாகம் போக்கும் நீர் என்றும், எழுத்துமொழி உறைந்த பனிக்கட்டியானாலும் என்றேனும் ஒரு நாள் பயன் தரும் என்றும் நான் உணர்கிறேன்.

---

2. **'ஒவ்வொரு புல்லையும்' கவிதையில் வெளிப்படும் சமத்துவச் சிந்தனைகளைப் புலப்படுத்துக.**

**'ஒவ்வொரு புல்லையும்' கவிதையில் கவிஞர் இன்குலாப் வெளிப்படுத்தும் சமத்துவச் சிந்தனைகள்:**

- ஒவ்வொரு புல்லையும் பெயர் சொல்லி அழைக்கவும், பறவைகளோடு எல்லை கடக்கவும் பெயர் தெரியாத கல்லையும், மண்ணையும் தனக்குத் தெரிந்த பெயர் சொல்லி அழைக்கவும் விரும்புவதிலிருந்து ஓரறிவு உயிரான புல்லையும் ஐந்தறிவு உயிர்களான பறவைகளையும், உயிரற்ற பொருள்களான கல்லையும் மண்ணையும் வேறுபாடு காணாமல் தோழமை உணர்வோடு சமத்துவமாகப் பார்க்கிறார்.
- போதி மரத்தினடியில் ஞானம் பெற்ற புத்தர் தோற்றுவித்த பௌத்த மதமும், சிலுவையில் தன்னுயிரை நீத்த இயேசு பிரானைப் பின்பற்றி எழுந்த கிறித்தவ மதமும் பிறைச் சந்திரனைக் குறியீடாகக் கொண்ட இசுலாமிய மதமும் மத வேறுபாடுகளை மறந்து 'சமத்துவம்' என்னும் புனலில் கரைந்து போக வேண்டுமென விரும்புகிறார்.
- உலகின் ஏதோ ஒரு மூலையில் ஓர் இனம் ஒடுக்கப்பட்டுத் துயருற்று விசும்பும் ஒலியும் தன் செவிகளில் கேட்கும் என நாடு கடந்த 'இன சமத்துவம்' பற்றிப் பேசுகிறார்.
- சமயம், பிரிவினைகள் கடந்த மானுடத்தை வரவேற்கிறார். சமயக் குறியீடுகள் இல்லாத, பிரிவினைச் சுவர்கள் இல்லாத சமத்துவமான உலகில் 'மனித நேயம்' என்னும் பாடலை இசைக்க விரும்புவதாகக் கூறுகிறார்.

---

3. **சிம்பொனித் தமிழரும் ஆஸ்கர் தமிழரும் இசைத்தமிழுக்கு ஆற்றிய பணிகளை நும் பாடப்பகுதி கொண்டு தொகுத்தெழுதுக. (மார்ச்.2019, 2020, 2024, ஆகஸ்ட்.2022)**

**சிம்பொனித் தமிழரும், ஆஸ்கர் தமிழரும் இசைத்தமிழுக்கு ஆற்றிய பணிகள்:**

**சிம்பொனித் தமிழர்:**

தமிழ்நாட்டின் தேனி மாவட்டத்தில் உள்ள பண்ணைப்புரத்தைச் சேர்ந்தவர். இவருடைய இயற்பெயர் இராசையா. இவரே தமிழினத்தின் பெருமைக்குரிய இசைமேதை இளையராஜா ஆவார். அன்னக்கிளி படத்தில் இசை அமைப்பாளராக அறிமுகமானவர்.

- அவருடைய 'எப்படிப் பெயரிடுவேன்' என்னும் இசைத்தொகுப்பும், 'காற்றைத் தவிர ஏதுமில்லை' என்னும் இசைத்தொகுப்பும் புதிய முயற்சிகள் எனக் கொண்டாடப்பட்டன.
- மகிழ்ச்சி, ஏக்கம், நம்பிக்கை, உற்சாகம், வலி போன்ற மனித உணர்வுகளுக்கும் இசை வடிவம் கொடுக்க முடியும் என்பதை 'இந்தியா 24 மணி நேரம்' என்னும் ஆவணக் குறும்படத்தின் பின்னணி இசையில் வெளிப்படுத்தியுள்ளார்.

- மாணிக்க வாசகர் எழுதிய திருவாசகப் பாடல்களுக்கு ‘ஆரட்டோரியா’ என்னும் இசை வடிவில் இசையமைத்துள்ளார்.
- ‘இராஜாவின் இரமண மாலை’, ‘இளையராஜாவின் கீதாஞ்சலி’ என்னும் தமிழ் இசைத்தொகுப்புகளையும், கன்னட மொழியில் ‘மூகாம்பிகை’ என்ற பக்தி இசைத் தொகுப்பினையும் வெளியிட்டுள்ளார்.
- அத்துடன் ஆதிசங்கரர் எழுதிய ‘மீனாட்சி ஸ்தோத்திரம்’ என்ற பக்திப் பாடலுக்கும் இசையமைத்துள்ளார்.
- ‘பஞ்சமுகி’ என்ற கர்நாடகச் செவ்வியல் இராகம் அவர் உருவாக்கியதாகும்.
- தமிழ் மட்டுமின்றி இந்தி, தெலுங்கு, மலையாளம், கன்னடம், மராத்தி என நம் நாட்டின் பிற மொழிப் படங்களுக்கும் இசையமைத்துள்ளார்.
- மகாத்மா காந்தி எழுதிய ஒரே பாடலான ‘நம்ரதா கே சாகர்’ என்னும் பாடலுக்கு இசையமைத்துள்ளார்.
- ஆசியாவிலேயே முதன்முதலில் சிம்பொனி என்னும் மேற்கத்திய செவ்வியல் வடிவ இசைக்கோவையை உருவாக்கியவர் இவரே. சிம்பொனி இசைப்பணியை எழுதக் குறைந்தது ஆறு மாதமாவது ஆகும். வெறும் பதின்மூன்று நாள்களில் இச்சாதனையை இவர் நிகழ்த்தியிருக்கிறார்.

**ஆஸ்கர் தமிழர்:**

ஆஸ்கர் தமிழர் ஏ.ஆர்.இரகுமான் அவர்களுடைய தந்தை ஆர்.கே.சேகர் மலையாளத் திரைப்பட உலகில் புகழுடன் விளங்கிய இசைக்கலைஞர். இளம்வயதிலேயே ஏ.ஆர்.இரகுமான் தம் தந்தையின் இசைப் பயணத்தில் இணைந்து கொண்டார். இளம் வயதிலேயே தந்தையை இழந்ததால் இவருடைய பள்ளிப் படிப்புக்கும் இடையூறு ஏற்பட்டது.

- 1992-ஆம் ஆண்டு ரோஜா என்னும் திரைப்படத்துக்கு இசையமைப்பாளராகத் தனது பயணத்தைத் தொடங்கினார். தம் முதல் படத்துக்கே தேசிய விருது பெற்ற முதல் இந்திய இசையமைப்பாளர் என்ற சிறப்பினைப் பெற்றார்.
- இவர் இசையமைத்த ‘வந்தே மாதரம்’, ‘ஜன கண மன’ என்னும் இசைத் தொகுதிகள், நவீன இசை வடிவில் நாட்டுப்பற்று உணர்வை மிளிரச் செய்தன.
- மலையாளம், தெலுங்கு, கன்னடம் உள்ளிட்ட பல தென்னிந்திய மொழிப்படங்களுக்கும் இசையமைத்ததோடு இந்தித் திரைப்பட உலகிலும் தம் இசை முத்திரையைப் பதித்தார்.
- மேலை நாட்டுத் திரைப்படங்களுக்கும், நாடகங்களுக்கும் இசையமைத்து உலக இசையமைப்பாளர்கள் வரிசையிலும் தம்மை நிலைநாட்டிக் கொண்டார்.
- திரையிசையில் சூஃபி இசையை அறிமுகப்படுத்தியவரும் இவரே.
- ‘ஸ்லம்டாக் மில்லியனார்’ என்ற திரைப்படத்தின் இசைக்காக ‘கோல்டன் குளோப்’ விருதினைப் பெற்று உலகளாவிய புகழ் பெற்றார். அவ்விருது பெற்ற முதல் இந்தியரும் இவரே. அதே படத்தின் இசைக்காக கிராமி விருதையும் பெற்றார்.
- 2009-ஆம் ஆண்டிற்கான சிறந்த திரைப்படப் பின்னணி இசைக்கான ஆஸ்கர் விருது பெற்றவர் அந்த அற்புதத் தமிழர்.

(அல்லது)

**முன்னுரை:**

- குருதியைச் சூடேற்றுவது இசையாகும். அந்த இசையால் தமிழர் பெருமையை உலகிற்குப் பறை சாற்றியவர்கள் இருவர்.
- ஒருவர் இசைஞானி இளையராஜா. இன்னொருவர் இசைப்புயல் ஏ.ஆர்.ரகுமான் ஆவார்.

**சிம்பொனித் தமிழர்:**

- ஆசியாக் கண்டத்திலேயே யாராலும் சிம்பொனியை இசைக்க முடியாது என்ற வசையைப் போக்கி, சிம்பொனியை இயற்றியவர் இளையராஜா அவர்கள்.
- ஆசியாவில் சிம்பொனியை முதலில் வடிவமைத்தவர் இளையராஜா.
- சிம்பொனி இசைப் பணியை எழுதக் குறைந்தது ஆறு மாதமாகும். ஆனால் இசைஞானியோ அதை 13 நாட்களில் அதை எழுதிமுடித்தார்.

**மாஸ்ட்ரோ:**

- தேனி மாவட்டம், பண்ணைப்புரத்தைச் சார்ந்தவர் இவர்.
- தன் முதல் படம் அன்னக்கிளியில் அறிமுகமாகி 70 மற்றும் 80களில் மிகச்சிறந்த உச்சத்தை அடைந்தார்.
- என்றைக்கும் இனிக்கும், என்றும் பசுமை மாறாதது அவர்தம் பாடல்களாகும்.
- இசையுலகின் புதிய முயற்சியில் வெளியானவை ''எப்படிப் பெயரிடுவேன், காற்றைத்தவிர வேறெதுவுமில்லை'' உலகோரால் பெரிதும் போற்றப்பட்ட இசை வடிவங்களாகும்.

**புதிய முயற்சி:**

- ஆரட்டோரியா இசை வடிவத்தில் மாணிக்க வாசகரின் திருவாசகத்திற்கு இசையமைத்துக் கொடுத்துள்ளார்.
- ஒரே நாளில் 100வது நாள் எனும் திரைப்படத்துக்கு இசையமைத்த பெருமைக்குரியவர்.
- தேவாரத்திற்கும், மகாத்மா எழுதிய ஒரே பாடலான நம்ரதா கே சாகர் என்ற பாடலுக்கும் இசையமைத்தவர். நம் இசைஞானி இளையராஜா ஆவார்.

**ஏ.ஆர்.ரகுமான்:**

- ஆஸ்கர் தமிழர் எனப்போற்றப்படும் இசைப்புயல் ஏ.ஆர்.ரகுமான் அவர்கள் முதல் படத்திலேயே மக்களின் மனதில் நீங்கா இடம் பிடித்தவர்.

**ஆஸ்கர் விருது:**

- அமெரிக்காவில் கோடாக் அரங்கமே அதிசயித்தது 2009-ல் இரு ஆஸ்கரையும் வென்ற முதல் தமிழன் ஏ.ஆர்.இரகுமான் ஆவார்.

**ஏ.ஆர்.ரகுமானின் வாழ்க்கை:**

- தந்தை பெயர் ஆர்.கே.சேகர். மலையாள இசையமைப்பாளராக இருந்தவர்.
- அவருடைய நான்கு வயதில் தந்தையை இழந்த ஏ.ஆர்.இரகுமான் இசைப்பயிற்சியை இரவெல்லாம் கற்றுக்கொண்டு பகலில் பள்ளி செல்பவர். வறுமையால் மேலும் படிப்பைத் தொடரமுடியாமல், 11-ஆம் வகுப்போடு பள்ளிப்படிப்பை முடித்துக்கொண்டவர்.
- ஏஆர்.ரகுமான் தனது 4 வயதில் ஹார்மோனியம் இசைக்கக் கற்றுக்கொண்டார்.

**இசையமைத்த முதல் திரைப்படம்:**

- ஏ.ஆர்.ரகுமான் இசைத்த முதல் திரைப்படமான ‘ரோஜா’ அவருக்கு தேசிய விருதினைப் பெற்றுத் தந்தது.
- துள்ளல் ஓசை கொண்டாட்டப் பாடல் மகிழ்ச்சியான மனநிலையை உருவாக்கும். அத்தகைய ஓசையை தம் பாடல்களில் மிகுதியாக இசைத்துக் காட்டியவர்.
- இவர் திரையிசையில் சூஃபி இசையை முதன்முதலில் அறிமுகப்படுத்தியவர்.
- ‘‘கோல்டன் குளோப்’’ விருது ‘ஸ்லம்டாக் மில்லியனர்’ என்ற திரைப்பட இசைக்காகப் பெற்றவர்.

**முடிவுரை:**

- இசை, உலகில் இருக்கும்வரை, இருவர் புகழும் உலகம் முழுவதும் நிலைத்திருக்கும் என்பதில் எந்த மாற்றமுமில்லை. இத்தமிழர்களால் நாட்டிற்கு கிடைத்த புகழினை எண்ணி நாம் பெருமையடைவோம்.

## அரசுப் பொதுத் தேர்வு வினா - விடைகள்

1. **சிம்பொனித் தமிழரின் சிறப்புகளை விரிவாக எழுது. அவர் இசைத்தமிழுக்கு ஆற்றிய தொண்டுகள், விருதுகள் பற்றி குறிப்பிடுக.** **(செப்.2020)**

**சிம்பொனித் தமிழரின் சிறப்புகள்:**

- சிம்பொனித்தமிழர் எனப் போற்றப்படுபவர் இசைஞானி இளையராஜா ஆவார்.
- இளையராஜா ‘அன்னக்கிளி’ படத்தில் இசையமைப்பாளராக அறிமுகமானார்.
- பழந்தமிழ் இசையையும் உழைக்கும் மக்களின் துள்ளல் இசையையும் மனத்தை மயக்கும் வகையில் கலந்து தந்தார்.
- திரையிசையில் கருநாடக இசை என்னும் பழந்தமிழிசையின் உன்னதத்தை உணர வைத்தார்.
- வாய்மொழித்தன்மை, யதார்த்தம் ஆகியன பொதிந்த அவருடைய இசை சாமானியரையும் ஈர்த்ததது.
- ஐவகை நிலப்பரப்புகளையும் காட்சிப்படுத்தும் மெட்டுகளைக் கொண்டது.
- மண் மணத்துடன் தம்மை இணைத்து அவர் இசையமைப்பது தான் எளிய மக்களை ஈர்ப்பதற்கான காரணமாகும்.

**சிம்பொனித்தமிழர் இசைத்தமிழுக்கு ஆற்றிய தொண்டுகள்:**

- எப்படிப் பெயரிடுவேன்? காற்றைத் தவிர ஏதுமில்லை ஆகிய இரு இசைத்தொகுப்புகளும் இசையுலகின் புதிய முயற்சிகள் எனக் கொண்டாடப்பட்டன.
- மனித உணர்வுகளுக்கு இசை வடிவம் கொடுக்க முடியும் என்பதை ‘இந்தியா 24 மணி நேரம்’ என்னும் ஆவணக்குறும்படத்தின் பின்னணி இசையில் வெளிப்படுத்தினார்.
- மாணிக்கவாசகர் எழுதிய திருவாசகப்பாடல்களுக்கு ‘ஆரட்டோரியோ’ என்னும் இசை வடிவில் அவர் இசையமைத்துள்ளார்.
- இரமண மாலை, இளையராஜாவின் கீதாஞ்சலி, கன்னட மொழியில் மூகாம்பிகை உள்ளிட்ட பக்தி இசைத்தொகுப்புகளை வெளியிட்டுள்ளார்.
- ஆதிசங்கரர் எழுதிய ‘மீனாட்சி ஸ்தோத்திரம்’ என்னும் பக்திப் பாடலுக்கு இசையமைத்துள்ளார்.

- ‘பஞ்சமுகி’ என்ற கருநாடக செவ்வியல் ராகம் இளையராஜா அவர்களால் உருவாக்கப்பட்டதாகும்.
- மேற்கத்திய இசையுடன் கருநாடக இந்துஸ்தானி இராகங்களை திரையிசையில் பயன்படுத்தி இருக்கிறார்.
- மகாத்மா காந்தி எழுதிய ஒரே பாடலான ‘நம்ரதா கே சாகர்’ என்னும் பாடலுக்கு இசையமைத்துள்ளார்.
- ஆசியாவிலேயே முதன் முதலில் ‘சிம்பொனி’ என்னும் மேற்கத்திய செவ்வியல் வடிவ இசைக்கோவையை உருவாக்கியவர் இளையராஜா மட்டுமே.

**சிம்பொனித்தமிழர் பெற்ற விருதுகள்:**

- இந்திய அரசு பத்மவிபூஷன் விருது வழங்கி கௌரவித்துள்ளது.
- சிறந்த இசையமைப்பாளருக்கான தேசிய விருதினைப் பலமுறை பெற்றுள்ளார்.
- சிறந்த பின்னணி இசைக்கான தேசிய விருதினையும் பெற்றுள்ளார்.
- தமிழ்நாட்டு அரசின் கலைமாமணி விருதையும், மத்திய பிரதேசத்தின் லதா மங்கேஷ்கர் விருதையும், கேரளத்தின் நிஷா கந்தி சங்கீத விருதையும் பெற்று இசைக்கும் இசைத்தமிழுக்கும் புகழையும் பெருமையையும் சேர்த்துள்ளார்.

## மொழியை ஆள்வோம் (பக்கம் – 17)

### சான்றோர் சித்திரம்



மகாவித்துவான் மீனாட்சிசுந்தரனார் (1815 – 1876)

தமிழ் இலக்கிய வரலாற்றில், ‘‘புலமைக் கதிரவன்’’ எனத் தமிழறிஞர்கள் போற்றிய தமிழ்மொழிப் பெரும்புலவர் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரனார் ஆவார். திருச்சிராப்பள்ளிக்கு அருகில் உள்ள **அதவத்தூர்** என்னும் ஊரில் பிறந்த இவர், திருவாவடுதுறை மடத்தின் தலைமைப் புலவராக விளங்கினார்.

மீனாட்சி சுந்தரனார், தமிழறிஞர்களைத் தேடிக் கண்டு, வழிபட்டு, செவிதிறந்து கற்றார். திருவாவடுதுறை மடத்தின் தலைவர் சுப்பிரமணிய தேசிகர், சென்னைத் தாண்டவராயர், திருத்தணிகை விசாகப் பெருமாள் ஆகியோரிடம் பூக்கள்தோறும் சென்று தேனுண்ணும் வண்டுபோல் பாடம் கற்றார்.

இவர் இயற்றிய **சேக்கிழார் பிள்ளைத்தமிழ்** என்ற நூல் இவருடைய பெருமையை என்றும் உணர்த்தும். தல புராணங்கள் பாடுவதில் சிறந்தவர். யமக அந்தாதி, திரிபந்தாதி, வெண்பா அந்தாதிகள் ஆகியவற்றை உருவாக்கிப் புகழ் பெற்றார். மாலை, கோவை, கலம்பகம், பிள்ளைத் தமிழ் ஆகியவற்றைப் பாடிப் பெருமை அடைந்தார். உ.வே.சாமிநாதர், தியாகராசர், குலாம்காதிறு நாவலர் முதலானோர் இவரின் மாணவர்கள். மகாவித்துவான் திரிசிரபுரம் மீனாட்சி சுந்தரனார் அவர்களின் புகழ் தமிழ் உள்ளவரையிலும் வாழும்.

1. **தமிழிலக்கிய வரலாற்றில் புலமைக் கதிரவன் - இத்தொடரில் புலமைக் கதிரவன் என்பதற்கு இலக்கணக்குறிப்புத் தருக.**

   உருவகத்தொடர்

2. **மேற்கண்ட பத்தியில் இடம் பெற்றுள்ள உவமை, உருவகத் தொடர்களைக் கண்டறிக.**

    தேனுண்ணும் வண்டு போல - உவமைத்தொடர்

    புலமைக் கதிரவன் - உருவகத்தொடர்

3. **மீனாட்சி சுந்தரனார் தலபுராணங்கள் பாடுவதில் சிறந்தவர் - விடைக்கேற்ற வினாவை அமைக்க.**

    - மீனாட்சி சுந்தரனார் எவற்றைப் பாடுவதில் சிறந்தவர்? (அல்லது)
    - தலபுராணங்கள் பாடுவதில் சிறந்தவர் யார்?

4. **பத்தியில் மொழி முதல் எழுத்துகளைக் கொண்டு அமைந்த சொற்களுள் எவையெவை வடமொழிச் சொற்கள் எனச்சுட்டுக.**

    மகா வித்துவான், தலபுராணங்கள், யமக அந்தாதி, திரிபந்தாதி, கலம்பகம், தேசிகர்.

5. **விளங்கினார் - பகுபத உறுப்பிலக்கணம் தருக.**

    **விளங்கினார் - விளங்கு + இன் + ஆர்**

    விளங்கு - பகுதி

    இன் - இறந்தகால இடைநிலை

    ஆர் - பலர்பால் வினைமுற்று விகுதி

---

## தமிழாக்கம் தருக.

1. **The Pen is mightier than the Sword.** **(ஜீன்.2019, 2023, மார்ச்.2025)**

    எழுதுகோலின் முனை வாளின் முனையை விட வலிமையானது.

2. **Winners don't do different things, they do things differently.** **(மே.2022)**

    வெற்றியாளர்கள் மாறுபட்ட செயலைச் செய்வதில்லை. செய்வதையே வித்தியாசமாகச் செய்கிறார்கள்.

3. **A picture is worth a thousand words.** **(ஜீன்.2019, மே.2022)**

    ஓர் ஓவியம் ஆயிரம் வார்த்தைகளுக்குச் சமம்.

4. **Work while you work and play while you play.** **(மார்ச்.2019, 2025)**

    உழைக்க வேண்டிய நேரத்தில் உழை! விளையாட வேண்டிய நேரத்தில் விளையாடு!

5. **Knowledge rules the World.**

    அறிவே உலகை ஆள்கிறது.

6. **An eye for an eye only ends up making the whole world blind.** **(மார்ச்.2025)**

    கண்ணுக்குக் கண் என்ற முடிவு உலகையே குருடாக்கிவிடும்.

7. **Nobody can hurt me without my permission.** **(மார்ச்.2025)**

    யாரும் என் அனுமதியின்றி என்னைக் காயப்படுத்த முடியாது.

## பிறமொழிச் சொற்களைத் தமிழாக்கம் தருக.

1. வாடகை - குடிக்கூலி
2. மாதம் - திங்கள்
3. போலீஸ் - காவல்
4. நிச்சயம் - உறுதி
5. உத்திரவாதம் - உறுதி
6. சந்தோஷம் - மகிழ்ச்சி
7. சம்பளம் - ஊதியம்
8. ஞாபகம் - நினைவு
9. வருடம் - ஆண்டு
10. தேசம் - நாடு
11. வித்தியாசம் - வேறுபாடு
12. உற்சாகம் - மகிழ்ச்சி / பூரிப்பு
13. விசா - நுழைவு இசைவு
14. பாஸ்போர்ட் - கடவுச்சீட்டு
15. கம்பெனி - நிறுவனம்
16. பத்திரிகை - நாளிதழ்
17. கோரிக்கை - வேண்டுகோள்
18. யுகம் - ஊழி
19. ராச்சியம் - நாடு
20. சரித்திரம் - வரலாறு
21. முக்கியத்துவம் - முதன்மை
22. சொந்தம் - உறவு
23. சமீபம் - அருகில்
24. தருணம் - வேளை / தக்க பொழுது

---

2. **கீழ்க்காணும் நிகழ்ச்சி நிரலினைப் படித்துச் செய்திக் கட்டுரையாக மாற்றுக. அச்செய்தியை நாளிதழில் வெளியிட வேண்டி முதன்மை ஆசிரியருக்குக் கடிதம் எழுதுக.**

**நிகழ்ச்சி நிரல்**

''அரியன கேள் புதியன செய்'' (திங்கள் கூடுகை)

| நேரம் : 2.30 பிற்பகல் | இடம் : அரசு மேல்நிலைப் பள்ளி |
|---|---|
| 2.30 | தமிழ்த்தாய் வாழ்த்து |
| 2.35 | வரவேற்புரை - மாணவர் இலக்கியச் செல்வன் |
| 2.40 | தலைமையுரை - திரு.எழிலன், தலைமை ஆசிரியர் |
| 2.50 | சிறப்புரை - கவிஞர் வாணி **''புலம்பெயர் தமிழரின் வாழ்க்கை''** |
| 3.45 | நன்றியுரை - மாணவர் ஏஞ்சலின் |
| 4.00 | நாட்டுப்பண். |

**அனுப்புநர்**

தலைமை ஆசிரியர்,
நகராட்சி மேனிலைப்பள்ளி,
திருவண்ணாமலை.

**பெறுநர்**

முதன்மை ஆசிரியர் அவர்கள்,
தமிழ் இந்து நாளிதழ்,
திருவண்ணாமலை.

**மதிப்பிற்குரிய ஐயா,**

வணக்கம்.

**பொருள்** : எங்கள் பள்ளியில் நடந்த திங்கள் கூடுகை நிகழ்ச்சியை நாளிதழில் வெளியிட வேண்டுதல் தொடர்பாக.

-----

எங்கள் பள்ளியில் ''அரியன கேள் புதியன செய்'' என்னும் தலைப்பில் திங்கள் கூடுகை நிகழ்ச்சி சென்ற வாரம் 01.04.2019-ஆம் நாள் திங்கள்கிழமை அன்று நடைபெற்றது. சிறப்பு விருந்தினராக கவிஞர் தமிழ் வாணி நிகழ்ச்சியில் கலந்துகொண்டார். தலைமை ஆசிரியர் இந்நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்கினார். இந்நிகழ்ச்சி பற்றிய செய்திக் கட்டுரையைக் கடிதத்துடன் இணைத்து அனுப்பியுள்ளேன். தங்கள் நாளிதழில் அதனை வெளியிடுமாறு வேண்டுகிறேன்.

நன்றி!

**இடம்** : திருவண்ணாமலை

**நாள்** : 15.04.2019

இப்படிக்கு,
தலைமையாசிரியர்,
நகராட்சி மேல்நிலைப்பள்ளி,
திருவண்ணாமலை.

**செய்திக்கட்டுரை**

ஏப்ரல் திங்கள் முதல்நாள் திங்கட்கிழமையன்று எங்கள் நகராட்சி மேனிலைப்பள்ளியில் பிற்பகல் 2.30 மணியளவில் 'அரியன கேள் புதியன செய்' என்ற திங்கள் கூடுகை நிகழ்ச்சி நடைபெற்றது. தமிழ்த்தாய் வாழ்த்துடன் தொடங்கிய இவ்விழாவில் மாணவர் இலக்கியச் செல்வன் வரவேற்புரை வழங்கினார். அதனைத் தொடர்ந்து எமது பள்ளித் தலைமையாசிரியர் திரு.எழிலன் அவர்கள் தலைமையுரை ஆற்ற, சிறப்பு அழைப்பாளராக வருகை புரிந்த கவிஞர் வாணி அவர்கள் 'புலம்பெயர் தமிழரின் வாழ்க்கை' என்ற தலைப்பில் சிறப்புரை நல்கினார். பின்னர் மாணவி ஏஞ்சலின் நன்றியுரைக்க, நாட்டுப் பண்ணுடன் விழா இனிதே நிறைவுற்றது.

## பத்தியினைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க

'தமிழ்' என்ற சொல் தமிழர்க்கு இனிமையானது. 'இனிமையும் நீர்மையும் தமிழெனல்' ஆகும் என்று பிங்கல நிகண்டு குறிப்பிடுகிறது. 'தமிழ்' என்ற சொல்லை இனிமை, பண்பாடு, அகப்பொருள் என்னும் பொருள்களிலும் வழங்கியுள்ளனர்.

''அதூஉம் சாலும் நற்றமிழ் முழுதறிதல்'' என்ற புறநானூற்றுப் பாடலடியில் 'தமிழ்' எனும் சொல் மொழி, கவிதை என்பவற்றைத் தாண்டிப் ''பல்கலைப் புலமை'' என்ற பொருளில் ஆளப்பட்டுள்ளது. ''தமிழ்கெழு கூடல்'' என்றவிடத்திலும் ''கலைப்புலமை'' என்ற பொருளிலே ஆளப்பட்டுள்ளது. கம்பன் ''தமிழ் தழீஇய சாயலவர்'' என்னும் இடத்து, 'தமிழ்' என்பதற்கு அழகும் மென்மையும் பொருளாகின்றன.

தேவாரம் போன்ற பக்தி இலக்கியங்களில் 'தமிழ்' பாட்டு என்னும் பொருளில் ஆளப்படுகிறது. ஞானசம்பந்தன் சொன்ன ''தமிழ் இவை பத்துமே'', மூலன் உரை செய்த மூவாயிரம் தமிழ் என்பன எடுத்துக்காட்டுகளாகும். முப்பது பாட்டுக்களாலான திருப்பாவையை ஆண்டாள் ''தமிழ் மாலை'' என்றே குறிப்பது இங்கு எண்ணத்தகும். ('பண்பாட்டு அசைவுகள்' - தொ.பரமசிவன்)

1. **தமிழ் என்னும் சொல்லுக்குரிய பல்வேறு பொருள்கள் யாவை?**

தமிழ் எனும் சொல்லுக்கு

- இனிமை
- பண்பாடு
- அகப்பொருள்
- பாட்டு
- கவிதை
- அழகு
- மென்மை
- பல்கலைப்புலமை

எனப் பல்வேறு பொருள்கள் உண்டு.

2. **பத்தியில் உள்ள அளபெடைகளைக் கண்டறிக.**

தமிழ் தழீஇய சாயலவர் :- சொல்லிசையளபெடை, அதூஉம் - இன்னிசை அளபெடை.

3. **தமிழ் என்றவுடன் உங்கள் மனத்தில் தோன்றுவதை ஒரு வரியில் குறிப்பிடுக.**

தமிழ் என்ற உடன் அமிழ்து அமிழ்து என மனதில் தோன்றுகிறது.

4. **திருப்பாவைக்கு ஆண்டாள் குறிப்பிடும் பெயர் யாது?**

தமிழ்மாலை

5. **பத்தியின் மையக்கருத்திற்கேற்ப ஒரு தலைப்பிடுக.**

தமிழின் இனிமை.

## பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக.

அ) காலங்காத்தால எந்திரிச்சிப் படிச்சா ஒரு தெளிவு கெடைக்கும்.

**அதிகாலையில் எழுந்து படித்தால் ஒரு தெளிவு கிடைக்கும்.**

ஆ) முயற்சி செஞ்சா அதுக்கேத்த பலன் வராமப் போவாது.

**முயற்சி செய்தால் அதற்கேற்ற பலன் வராமல் போகாது.**

இ) காலத்துக்கேத்த மாரிப் புதுசுபுதுசா மொழி வடிவத்த மாத்தனும்.

**காலத்துக்கேற்றாற் போல புதிது புதிதாக மொழி வடிவத்தை மாற்ற வேண்டும்.**

ஈ) ஒவ்வொருத்தரும் பேசிக்கிட்டிக்கும்போது எல்லாத்தையும் கவனமாப் பதிய வைக்கனும்.

**ஒவ்வொருவரும் பேசிக்கொண்டிருக்கும்போது எல்லாவற்றையும் கவனமாகப் பதிய வைக்க வேண்டும்.**

உ) தேர்வெழுத வேகமாப் போங்க, நேரங்கழிச்சி போனாப் பதட்டமாயிரும்.

**தேர்வெழுத விரைவாகச் செல்லுங்கள், நேரம் கழித்துச் சென்றால் பதற்றமாகிவிடும்.**

# மொழியோடு விளையாடு (பக்கம் – 19)

## 1. எண்ணங்களை எழுத்தாக்குக.



பாடிப் பாடி பறந்த பறவை
பருக நீரின்றி.......
தேடித் தேடி அலைந்ததே!
காய்ந்து கிடந்த குளமும்
ஓடி மறைந்த ஏரியும்
தாகம் தீர்க்க இயலாதே!
சொட்டும் நீரைக்கண்டு
சோர்வைத் தீர்த்துக் கொள்ளும் பறவை!
அந்தோ பரிதாபம்!
இனியேனும் வாழவிடுங்கள்
வன உயிரிகளை............

## 2. தொடரில் உள்ள சொற்களை ஒழுங்குபடுத்தி இரண்டு சொற்றொடர்களாக்குக.

**(எ.கா.) ஓர் பயிர் பறவை வளர வேண்டும் அழகான தண்ணீர் மயில்** **(மார்ச்.2023)**

அ) மயில் ஓர் அழகான பறவை.

ஆ) பயிர் வளரத் தண்ணீர் வேண்டும்.

---

**i) பள்ளிக்கூடம் எல்லாம் தருபவை ஒவ்வொரு கலைகள் குழந்தையும் போக வேண்டும் மகிழ்ச்சி.**

அ) ஒவ்வொரு குழந்தையும் பள்ளிக்கூடம் போக வேண்டும்.

ஆ) கலைகள் எல்லாம் மகிழ்ச்சி தருபவை.

---

**ii) நிலவு வீசுவதால் தெற்கிலிருந்து மாலை தென்றல் மகிழ்விக்கும் எனப்படுகிறது மனதை.** **(மார்ச்.2020, 25)**

அ) தெற்கிலிருந்து வீசுவதால் தென்றல் எனப்படுகிறது.

ஆ) மாலை நிலவு மனதை மகிழ்விக்கும்.

---

**iii) பிறர் செய்யாவிட்டாலும் செய்த தீமை மறக்கக்கூடாது நன்மை செய்யக்கூடாது உதவியை**

அ) பிறர் செய்த உதவியை மறக்கக் கூடாது.

ஆ) நன்மை செய்யாவிட்டாலும் தீமை செய்யக்கூடாது.

---

**iv) நேற்று ஏன் வந்த பையன் பக்கத்தில் யார் இருக்கவில்லை தெரியுமா?** **(ஜீன்.2019)**

அ) நேற்று வந்த பையன் யார் தெரியுமா?

ஆ) பக்கத்தில் ஏன் இருக்கவில்லை?

---

## 3. கீழ்க்காணும் குறிப்புகளில் பொதிந்துள்ள மேடைப்பேச்சில் சிறந்து விளங்கிய தமிழறிஞர்களின் பெயர்களைக் கண்டறிக.



அ) சென்னை மாகாணத்துக்குத் தமிழ்நாடு என்று பெயர் மாற்றம் செய்த முதல்வர் (3)

**அண்ணா**

ஆ) தொழிலாளர்களின் தந்தை என்று அழைக்கப்படுபவர் (10)

**கல்யாணசுந்தரனார்**

இ) உயிரை உணர்வை வளர்ப்பது தமிழே என்று பாடியவர் (6)

**பாரதிதாசன்**

ஈ) பொதுவுடைமைக் கொள்கையின் முன்னோடிகளுள் ஒருவர் (2)

**ஜீவா**

---

## 4. வேர்ச்சொற்களை எடுத்துக்காட்டில் உள்ளவாறு தொடர்களாக மாற்றுக.

**(எ.கா.) வா - வேர்ச்சொல்** **(மார்ச்.2023)**

அருணா வீட்டுக்கு வந்தாள். (வினைமுற்று)

அங்கு வந்த பேருந்தில் அனைவரும் ஏறினர். (பெயரெச்சம்)

கருணாகரன் மேடையில் வந்து நின்றார். (வினையெச்சம்)

என்னைப் பார்க்க வந்தவர் என் தந்தையின் நண்பர். (வினையாலணையும் பெயர்)

**ஆ) பேசு - வேர்ச்சொல்**

அவன் பேசினான் (வினைமுற்று)

அவன் பேசிய வார்த்தை நன்று (பெயரெச்சம்)

அவன் பேசி முடித்தான். (வினையெச்சம்)

அவனுடன் பேசியவர் அவன் தந்தை (வினையாலணையும் பெயர்)

---

**ஆ) தா - வேர்ச்சொல்**

அவள் பேனா தந்தாள் (வினைமுற்று)

அது அவள் தந்த பேனா (பெயரெச்சம்)

எனக்கே அதைத் தந்துவிட்டாள் (வினையெச்சம்)

அவளுக்கு அப்பேனாவைத் தந்தவர் அவள் தந்தை (வினையாலணையும் பெயர்)

---

**இ) ஓடு - வேர்ச்சொல்** **(மார்ச்.2024)**

பூனை ஓடியது (வினைமுற்று)

ஓடிய பூனையை நாய் துரத்தியது (பெயரெச்சம்)

பூனை ஓடி மறைந்தது (வினையெச்சம்)

நாயைத்தேடி ஓடியவர் விழுந்தார். (வினையாலணையும் பெயர்)

---

**ஈ) பாடு - வேர்ச்சொல்**

குயில் பாடியது (வினைமுற்று)

குயில் பாடிய பாட்டு இனிமையாக இருந்தது (பெயரெச்சம்)

குயில் பாடி முடித்தது. (வினையெச்சம்)

குயில் போலப் பாடியவர் யார் எனத்தெரியவில்லை. (வினையாலணையும் பெயர்)

---

## நிற்க அதற்குத் தக

முன்மாதிரியானவர்கள் என்று யாரைக் கருதுவீர்கள்? அவர்களிடமிருந்து நீங்கள் கற்றுக்கொள்ள விரும்பும் நற்பண்புகளைக் குறிப்பிடுக.

| முன்மாதிரியானவர் | நான் விரும்பிய நற்பண்பு |
|---|---|
| தந்தை | நேரந்தவறாமை |
| தொடக்கபள்ளி ஆசிரியர் | எதற்கும் அஞ்சாமை |
| உறவினர் | எதையும் பெரிய துன்பமாக எண்ணாமை |

## படிப்போம்; பயன்படுத்துவோம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Aesthetics | - அழகியல் | Art Critic | - கலை விமர்சகர் | Migration | - புலம்பெயர்தல் **(ஜீன்.2023)** |
| Journalist | - இதழாளர் | Book Review **(மே.2022)** | - புத்தக மதிப்புரை | Philosopher | - மெய்யியலாளர் |

## மொழிப்பயிற்சி

### தமிழாக்கம் தருக.

1. **One flower makes no garland.**
   தனிமரம் தோப்பாகாது.
2. **Truth alone triumphs.**
   வாய்மையே வெல்லும்
3. **Time and tide wait for none.**
   ஐயர் வரும்வரை அமாவாசை காத்திருக்காது.
4. **Too much of anything is good for nothing.**
   அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு.
5. **Don't mourn for hire.**
   கூலிக்கு மாரடிக்காதே.
6. **Cast no your pearls before swine.**
   கழுதைக்குத் தெரியுமா கற்பூர வாசனை.
7. **Depent not on quicksand.**
   மண்குதிரை நம்பி ஆற்றில் இறங்காதே.
8. **He who restrains his lips is wise.**
   நாவடக்கமுடையார்; ஞானமுடையார்
9. **Mercy surpasses justice.**
   நீதியை மிஞ்சுவது இரக்கம்
10. **The noisy floer catcheth no birds.**
    துள்ளுகின்ற மாடு பொதி சுமக்காது.

### பிறமொழிச் சொற்களைத் தமிழாக்கம் செய்க

| | |
|---|---|
| அசல் | - முதல் |
| கிஸ்தி | - வரி |
| சர்க்கார் | - அரசு |
| பந்தோபஸ்து | - பாதுகாவல் |
| தராசு | - துலாக்கோல் |
| தபால் | - அஞ்சல் |
| உருமால் | - மேலாடை |
| ஜல்தி | - விரைவாக |
| புகார் | - குறைகூறல் |
| கெஜம் | - மூன்றடி |
| பிரார்த்தனை | - நேர்த்திக்கடன் |
| வயது | - அகவை |
| ஜென்மம் | - பிறவி |
| ஜேஷ்டபுத்திரன் | - மூத்தமகன் |
| அவசரம் | - விரைவு |
| மிருகம் | - விலங்கு |
| ஜோதிடன் | - கணியன் |
| ஆசிர்வாதம் | - வாழ்த்து |
| சஷ்டியப்த பூர்த்தி | - அறுபதாம் ஆண்டு நிறைவு |
| கிரகம் | - கோள் |
| ரெக்கார்ட் | - ஆவணம் |
| ஃபைல் | - கோப்பு |
| செகரட்டரி | - செயலர் |
| பால்கனி | - முகப்பு மாடம் |
| புல்லிடின் | - பருவ வெளியீடு |
| செக் | - காசோலை |
| பாஸ்போர்ட் | - கடவுச்சீட்டு |
| இபிகிராப் | - கல்வெட்டு |
| விசா | - நுழைவு இசைவு |
| புரோட்டோகால் | - மரபுத்தகவு |

விழித்துக் கொண்டிருக்கும் நேரமெல்லாம்
படித்துக் கொண்டிருப்போம்

## எமது வெளியீடுகள் (STATE BOARD)

6th to 12th Std - **STEP TO SUCCESS ENGLISH**

10th to 12th Std - **ELITE ENGLISH**

6th to 12th Std - **உன்னால் முடியும் தமிழ்**

10th to 12th Std - **அமுத சுரபி தமிழ்**

6th to 10th Std - **சமுகஅறிவியல்**
(Tamil & English Medium)

8th to 10th Std - **அறிவியல்**
(Tamil & English Medium)

# டால்பின் பப்ளிகேசன்ஸ்®

239, கீழப்பட்டித்தெரு, ஸ்ரீவில்லிபுத்தூர் - 626 125, விருதுநகர் மாவட்டம். த.நா.

**Cell : 98653 06197 / 89256 77710 / 99435 67646**
**93453 14146 / 93453 30937**

Mail us : dolphin.pub2005@gmail.com Visit us : www.kalvidolphin.com

ICICI Bank iMobile BHIM pockets

Merchant Name : DOLPHIN PUBLICATIONS
Mobile Number : 8668163362

Steps to Pay UPI QR Code
Open UPI app > Select 'Tap to Pay' > Scan QR Code > Enter Amount

G Pay **94427 17794**
**63743 17883**